

நீலகிரி மாவட்டம், உதகை, தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், மகளிர் திட்டம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, மீன்வளத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, தாட்கோ மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து துறைச்சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் 21.09.2024 அன்று நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி உட்பட பலர் உள்ளனர்.

# திருவாரூர் மாவட்ட மாணவர் அணிக்கான நேர்காணல்!

## மன்னை.த.சோழராஜன் – தமிழ் கா.அமுதரசன் பங்கேற்பு!

திருவாரூர்,செப்23.

திருவாரூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கான மாணவரணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் திருவாரூரில் நடைபெற்றது. மாநில மாணவரணி துணை செயலாளர்கள் மன்னை.த.சோழராஜன், தமிழ். கா.அமுதரசன் ஆகியோர் பங்கேற்று நேர்முக தேர்வினை நடத்தினர். நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற நேர்காணலை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.பகலவன் மற்றும் துணை அமைப்பளர்கள் சிறப்புடன் நடத்தினர்.

தமிழ்நாடு முதல்வர் தளபதி , மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் , மாணவரணி செயலாளர் சி.வி.எம். பி.எழிலரசன் ஆகியோர்களின் வழிகாடுதல்களின்படியும் , மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களின் ஆலோசனைகளின்படியும் திருவாரூர் மாவட்ட மாணவரணிக்கான ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் தேர்வுக்கான நேர்காணல் மாநில மாணவரணி துணை செயலாளர்கள் மன்னை.த.சோழராஜன், தமிழ். கா.அமுதரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் தலைமையில் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.பகலவன் மற்றும் துணை அமைப்பளர்கள் மதி. நெல்சன் மண்டேலா, மதி. முத்துகுமார், ஜா.நூருல் அமீன், வை. யோகபாலன், எஸ்.சகுந்தலாதேவி ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

தமது 14ம்வயதில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மாணவநேசன் என்கிற பத்திரிகை வழியாக தொடங்கிய தமிழ் காக்கும் போராட்டம் தொடங்கிய திருவாரூரில் மாணவர் அணி பொறுப்பாளர் தேர்விற்கு ஏராளமான மாணவர்களும், இளைஞர்களும்,பெண்களும் பங்கேற்றனர்.




திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மற்றும் சமூக வலைதள பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கழக மாநில மகளிரணி துணை செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில், கழக மகளிர் தொண்டரணி செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் நாமக்கல் ப.ராணி முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர் சத்யா பழனிக்குமார், மாநில தொண்டரணி துணை செயலாளர், திருப்பூர் வடக்கு, தெற்கு, நீலகிரி மாவட்ட பொறுப்பாளர் நா. மாலதி, கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி, மாவட்ட அமைப்பாளர்கள் மகளிர் அணி அனிதா செல்வராஜ், தொண்டரணி லதா லட்சுமி நாராயணன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, அமைப்பளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்! அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி பங்கேற்பு!**

# தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணத்தில் கலைஞர் கோட்டம் திறப்புவிழா!

## கழக தோழர்கள் திரளாக பங்கேற்க மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வேண்டுகோள்!

தஞ்சாவூர் செப்.23.

கும்பகோணம், வலையப்பேட்டை பைபாஸ் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையுடன் கூடிய கலைஞர் கோட்டத்தை 26.09.2024 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளதால் கழகத் தோழர்கள் திறளாது கலந்தக்கொள்ள வேண்டுமாய் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு. கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் அறிக்கை வருமாறு :



வருகின்ற 26.09.2024 வியாழன்கிழமை காலை 09.00 மணியளவில் கும்பகோணம், வலையப் பேட்டை பைப்பாஸ் சாலையில் “நீண்ட தூரம் தமிழினத்துக்காக ஓடி, ஓடி உழைத்த முத்தமிழறிஞர் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் அவர் விரும்பும் நூலகத்துடன் கூடிய ”கலைஞர் கோட்டத்தை“ கழக இளைஞர் அணி செயலாளரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார். அதனை தொடர்ந்து பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்க உள்ளார்.

அதுசமயம் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடி கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

**கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி**

# தி.மு.க. இலக்கிய அணி சார்பில் நூல்கள் அறிமுக விழா!

## புதுவை தமிழ்ச்சங்கத்தில் இன்று நடக்கிறது!

புதுவை, செப். 23-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை இந்த ஆண்டு முழுவதும் பட்டிமன்றம், பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக்கூட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் கலைஞர் அவர்களின் சாதனைகள் மக்களை சென்றடைய வேண்டும் என்று கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள் அதனடிப்படையில் புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் இரா. சிவா அவர்கள் தலைமையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக கலைஞர் நூற்றாண்டு நிறைவுவிழாவையொட்டி, புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழக இலக்கிய அணி சார்பில், இரு பெரு நூல்கள் அறிமுக விழா புதுவை தமிழ்ச்சங்கத்தில் இன்று 23-ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு நடைபெறுகிறது.

இந்த விழாவிற்கு புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் தலைமை தாங்குகிறார். அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார் முன்னிலை வகிக்கிறார்.

மாநில இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு தொடக்கவுரை ஆற்ற, இலக்கிய அணித் தலைவர் கலைமாமணி எம்.எஸ். ராஜா வரவேற்புரை ஆற்றுகிறார்.

முனைவர் நா. சுலோசனா அவர்கள் எழுதிய திரைவானில் கலைஞர் எனும் நூலை திமுக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் கடலூர் இள. புகழேந்தி அவர்களும், முனைவர் வா.மு.சே. ஆண்டவர் எழுதிய பன்முகநோக்கில் கலைஞரின் படைப்பிலக்கியங்கள் எனும் நூலை புதுச்சேரி மாநில திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் பூ. மூர்த்தி அவர்களும் அறிமுகவுரை ஆற்றுகின்றனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.பி. திருநாவுக்கரசு, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், வே. கார்த்திகேயன், கதிர்காமம் தொகுதி செயலாளர் ப. வடிவேல், மாணவர் அணி அமைப்பாளர் எஸ். பி. மணிமாறன், மகளிர் அணி அமைப்பாளர் ந. காயத்ரி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ரோ. நித்திஷ், கலை, இலக்கிய பெருமன்ற தலைவர் எல்லை. சிவக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

நூல் ஆசிரியர்கள் முனைவர் நா. சுலோசனா, முனைவர் வா.மு.சே. ஆண்டவர் ஆகியோர் ஏற்புரை ஆற்றுகிறார்கள்.

இலக்கிய அணி துணைத் தலைவர் வி.எஸ். பாண்டியன் நன்றியுரை ஆற்றுகிறார். விழாவிற்கான ஏற்பாடுகளை இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் தர்மராஜ், கலிவரதன், ஆளவந்தார், கோதண்டபாணி, சோமசுந்தரம், கலிமுல்லா, ஜபருல்லா ஆகியோர் செய்கின்றனர்.

**வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி. – பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ.– எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்**

# மோகனூர் காவிரி ஆற்றில் நாட்டின மீன்குஞ்சுகளை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி இருப்பு செய்தார்!

நாமக்கல், செப். 23

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், காவிரி ஆற்றில் நாட்டின மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு நாட்டின மீன்குஞ்சுகளை இருப்பு செய்தார்.

பிரதம மந்திரி மத்திய சம்படா யோஜனா திட்டம் (PMMSY) 2024 - 25ன் கீழ் ஆறுகளில் நன்னீர் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டத்தில் அரசு மீன்பண்ணை களில் (80 100 மி.மீ) உற்பத்தி செய்து ஆறுகளில் இருப்பு செய்யும் திட்டத்தின்கீழ் மேட்டூர் அணை, அரசு மீன் பண்ணை வாயிலாக 10.00 இலட்சம் மீன்குஞ்சுகள் வளர்ப்பு செய்து தென்பெண்ணை மற்றும் காவிரி ஆற்றில் இருப்பு செய்திடுமாறு வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்திற்கு காவேரி ஆற்றில் 4.00 இலட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆறுகளை தங்களது வாழ்வாதாரமாக கொண்டுள்ள உள்நாட்டு மீனவர்களின் வருவாயினை கணிசமாக அதிகரித்திட வேண்டுமென்ற நோக்கில் செயல் படுத்தப்படு கிறது.

தமிழ்நாட்டின் ஆறுகளில் பெரும்பாலான இயற்கை வகையான நாட்டின் மீன் இனங்கள் முற்றிலுமாக அழிந்துவிடாமல் பாதுகாத்துப் பெருக்கி அவற்றை அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்து சென்றிடும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டின மீன்குஞ்சுகளை இருப்பு செய்வதன் மூலம் உயிரனங்களின் உயிர்ச்சம நிலையை பாதுகாத்திட முடியும். நாட்டின மீன்வளத்தினைப் பாதுகாத்திட, நாட்டின மீன்களை அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களில் தூண்டுதல் முறையில் இனப்பெருக்கம்செய்துமீன்குஞ்சுகளை ஆறுகளில் இருப்பு செய்யப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள காவிரி ஆற்றில் சேல்கெண்டை, கல்பாசு, இந்திய பெருங்கெண்டைகள் ஆகிய மீன்குஞ்களின் பிழைப்புத்திறன் வெகுவாக அதிகரித்துவிடும். இத்திட்டத்தின் கீழ் மீன் குஞ்சு கள், மீன்விரலிகளாக 80 மி.மீ முதல் 100 மி.மீ அளவில் வளர்த்தெடுக்கப்பட்டு காவிரி ஆற்றில் 4 லட்சம் மீன்குஞ்சுகள் இன்றையதினம் இருப்பு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து, 6 மீனவர்களுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பில் குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய இரு சக்கர வாகனங்களை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் உமா கலைச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**கிச்சிப்பாளையம்**

# மொழிப்போர்த் தியாகி பி.ஏ.ராமலிங்கம் மறைவு!

## இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

சேலம், செப். 23-

சேலம் மத்திய மாவட்டம் கிச்சிப்பாளையத்தை சேர்ந்த மொழி போர் தியாகி பி. ஏ ராமலிங்கம் ( வயது 85) அவர்கள் உடல் நலிவுற்ற நிலையில் நேற்று காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தியறிந்ததும் அன்னாரின் உடலுக்கு மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ., மாநகர துணைசெயலாளர். வி. கணேசன், பகுதி செயலாளர் கே.ஜெய், கோட்டச் செயலாளர்கள் ஜி. வெங்கடேசன், சத்யன் உட்பட ஏராளமான கழக தொண்டர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா. இலட்சுமணன், கோலியனூர் தெற்கு ஒன்றியம், தளவானூர், கவிதா அன்பரசு இவர்களின் வீடு எரிந்து சேதமானதை அறிந்து நேரில் சென்று பார்வையிட்டு, ஆறுதல் கூறி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் தே.முருகவேல், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், வட்டாட்சியர் கனிமொழி, வருவாய் ஆய்வாளர் ராபர்டு, கிராம நிர்வாக அலுவலர் நந்தகுமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.தவமணி, கிளைச் செயலாளர்கள் தளவானூர் அர்ஜுனன், ராஜேந்திரன், பாண்டுரங்கன், ஊராட்சி மன்ற தலைவர் பாரதி தஷ்ணாமூர்த்தி, பிரதிநிதி சந்திரன், ராஜேந்திரன், ராமதாஸ், துணை தலைவர் வேலு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

# 8 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், செப். 23-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலப் பள்ளிப்பட்டி, ஈஸ்வரமூர்த்தி பாளையம், திம்மநாயக்கன்பட்டி, மத்துருட்டு, மங்களபுரம், ஆயில்பட்டி மற்றும் கார்கூடல்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.5.26 கோடி 8 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறந்து வைத்தார்.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலப் பள்ளிப்பட்டி மற்றும் திம்மநாயக்கன்பட்டி ஊராட்சிகளில் தலா ரூ.8.00 இலட்சம் என மொத்தம் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 22 எதிர் சவ்வூடு பரவல் குடிநீர் சுத்திகரிப்பு நிலை யங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், நாமகிரிப் பேட்டை கழகச் செயலாளருமான கே.பி.இராமசுவாமி மற்றும் ஊராட்சி தலைவர்கள், கழக தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மூலப்பள்ளிப்பட்டி ஊராட்சியில் ரூ.9.16 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு மாதா கோயில் முதல் பசிரிமலை சாலை வரை 130 மீ நீளம், 4.5 மீ அகலத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல், ரூ.9.16 இலட்சம் மதிப்பீட்டில் மாதா கோயில் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி, ஈஸ்வரமூர்த்தி பாளையம் ஊராட்சியில் ரூ.10.25 இலட்சம் மதிப்பீட்டில் காத்தாகவுண்டனூர் ராஜ் வீடு முதல் சின்ன தம்பி வீடு வரை 155 மீ நீளம், 4 மீ அகலத் திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, ரூ.7.32 இலட்சம் மதிப்பீட்டில் காத்தாகவுண்டனூர் நடுவீதி நடேசன் வீடு முதல் டி.வி ரூம் வரை 82 மீ நீளம், 4 மீ அகலத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, பாரத பிரதமர் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.14 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர் மெயின் ரோடு முதல் சிங்கிலியன் கோம்பை சாலை வழி தாண்டாகவுண்டன் பாளையம் மூலக்காடு வேம்பாகவுண்டன் புதூர் வரை தார் சாலை அமைக்கும் பணி, ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் ஆயில்பட்டி ஊராட்சி ஊத்துப்புளிகாடு வழி ஆண்டிகுட்டை சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி, அயோத்திய தாசர் பண்டிதர் குக்கிராமம் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.4.75 இலட்சம் மதிப்பீட்டில் கார்கூடல்பட்டி ஊராட்சி, மெட்டாலா குக்கிராமம் புதுக்காலனி சரசு வீடு முதல் கனகராஜ் வீடு வரை கான்கிரீட் சாலை அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூ.5.26 கோடி மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணிகளுக்கு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டினார்.

# செஞ்சி ஒன்றியம் - ரெட்டிபாளையத்தில் ரூ 63.71 லட்சத்தில் புதிய தார்சாலை!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணியை தொடங்கி வைத்தார்!

செஞ்சி செப் 23.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம்ஆலம் பூண்டி ஊராட்சி ரெட்டி பாளையம் முதல் மல்லாண்டி செல்லும் சாலையை தமிழ்நாடு முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ 63.71லட்சம் மதிப்பீட்டில் புதிய தார் சாலை அமைப்பதற்கு திக்காமேடு கெங்கையம்மன்கோவில் அருகில் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.ஒன்றிய கவுன்சிலர் கேமல் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் முத்தம்மாள் சேகர் அனைவரையும் வரவேற்றார்.நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 63.71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலை அமைப்பதற்கு பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன்,ஊராட்சி ஒன்றிய பொறியாளர் அருண்பிரசாத்,பணி மேற்பார்வையாளர் சம்பத் ஒன்றிய நிர்வாகிகள் வாசு, அய்யாதுரை, சிவப்பிரகாசம், ஆலபூண்டி ஊராட்சி நிர்வாகிகள் சங்கர், சிவராமன், சந்திரசேகரன், ரமேஷ், அண்ணாமலை, குருவன் ரெட்டி யார், ராஜேந்திரன்தாமோதரன், விஜயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தென்றல் மணிமாறன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தென்றல் செல்வராஜ் தலைமையில் கே.வி.கே.எஸ்.சபரி, கார்த்திகேயன், இரா.நவநீதகிருஷ்ணன், எஸ்.கௌதம் முன்னிலையில் பொள்ளாச்சி சுப்பிரமணி சுவாமி திருக்கோவிலில் கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் பொதுமக்களுக்கு வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.